செய்தி வெளியீடு எண்:683 நாள்:04.09.2021

# செய்தி வெளியீடு

## வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு
## இராஜாஜி சாலையில் உள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு நாளை (5.9.2021)
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

நம் தாய் நாட்டின் விடுதலைக்காகத் தனது சொத்து சுகங்களையும் சொந்த பந்தங்களையும் இழந்து, இரட்டை ஆயுள் தண்டனையான தீவாந்திர சிறைத் தண்டனை அனுபவித்து, சிறையில் 'செக்கிழுத்தத் தியாகச் செம்மல்' கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150-வது பிறந்த நாள் விழா மிகச் சிறந்த முறையில் தமிழகம் முழுவதும் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்மையில் நடைபெற்ற சுதந்திரத் தின விழாவின் போது அறிவித்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து நாளைய தினம் (05.09.2021) காலை 10 மணியளவில், சென்னை இராஜாஜி சாலையில் துறைமுக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கப்பலோட்டியத் தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலையணிவித்து அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள் .

இந்திய திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு, தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் மற்றும் தியாகிகள் ஆகியோருக்குப் பெருமை சேர்ப்பதோடு மட்டுமின்றி, இன்றைய இளைய தலைமுறையினரும் அறிந்து பயன்பெறுகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச்சிலைகள், மணிமண்டபங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் நூலகங்கள் ஆகியன அத்தலைவர்கள் பிறந்த ஊரிலும், சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நிறுவப்பட்டு, அவையாவும்

செய்தித் துறையின் சார்பில் சிறந்த முறையில் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அன்னார்களது தியாகங்களை நினைவுகூறும் வகையில், பிறந்த நாளானது அரசு விழாக்களாக ஆண்டுதோறும் செய்தித்துறை சார்பில் நடத்தப்படுகிறது.

நம் தாய்நாட்டின் விடுதலைக்குத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானர் வ.உ.சிதம்பரனார் என்றால் அது மிகையில்லை. அரசியலில் பாலகங்காதரத் திலகரைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டு, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தினை அரசியல் ரீதியாக மட்டுமின்றி, வணிக ரீதியாகவும் வீழ்த்திடும் உயர்ந்த நோக்கத்தில் 'சுதேசி நேவிகேஷன் கம்பெனி' என்கின்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய காரணத்தினாலே 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயர் பெற்றார். தனது வீரம் செறிந்த சொற்பொழிவுகளால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒருபுறம் அதிர வைத்தாலும், தாய் மொழியாம் தமிழ் மொழியின் மீது அவர் கொண்டிருந்த தணியாத தாகத்தின் பயனாக, பல அரிய நூல்களையும் தன் சுயசரிதத்தையும் கவிதை வடிவில் எழுதி நாளிதழையும் நடத்திய தீரர் அவர்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குப் பெருமை சேர்த்த நிகழ்வுகள்.**

- தியாகச்சீலர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில் அன்னாரின் நூற்றாண்டு விழாவானது, தூத்துகுடியில் 1972ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார், தமிழ்நாடு ஆளுநர் திரு.கே.கே.ஷா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றுச் சிறப்புடன் கொண்டாடப்பட்டு, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.
- அந்நூற்றாண்டு விழாவிலே தியாகச்சீலர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவம் பதித்த அஞ்சல் தலைகளைப் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார்

வெளியிட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருப்பெயர் சூட்டி பெருமை சேர்த்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அக்கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் துறைமுகக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, முதல் கப்பல் வந்து நிற்கும் இடத்திற்கு வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார்கள்.
- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொடர் முயற்சியின் பயனாக, 2.12.1975 மற்றும் 31.12.1976 அன்று கட்டி முடிக்கப்பட்ட நான்கு கப்பல் தளங்களுக்கும் செக்கிழுத்தச் செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.
- அன்னாருக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் மிகவும் பழமை வாய்ந்த ஜார்ஜ் டவுன் என்ற பெயரை வ.உ.சிதம்பரனார் நகர் என்று பெயர் மாற்றம் செய்து அறிவித்தார்கள்.
- வ.உ.சிதம்பரனார் அவர்கள் கோவைச் சிறையில் இழுத்த செக்குகளைக் கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை முகப்பிலும், சென்னை காந்தி மண்டபத்திலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொதுமக்கள் கண்டு மகிழும் வகையில் காட்சிப்படுத்தினார்கள்.
- 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தியாகச் செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய 16 நூல்களையும் அரசுடமையாக்கிச் சிறப்பித்தார்கள்.

**வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அன்னாருக்கு மென்மேலும் பெருமையும் புகழ் சேர்த்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க**

**ஸ்டாலின் அவர்களின் நேற்றைய தினம் சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ், 14 முத்தான அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள்**

நம் தேசத்தின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்தும், அயராது பாடுபட்டு, தாய் நாட்டிற்கும் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் எல்லாம் நிறைந்துள்ள செக்கிழுத்தச் செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்கு மென்மேலும் பெருமையும் சேர்க்கின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் சட்டப் பேரவையில் 110 விதியின்கீழ், 14 முத்தான அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். அவற்றில், சென்னையில் அன்னாரின் திருவுருவச் சிலை, தூத்துக்குடி மாநகர முதன்மைச் சாலைக்குத் திருப்பெயர், அன்னார் வாழ்ந்த இல்லம், மணிமண்டபங்களில் ஒலி ஒளிக் கண்காட்சி, அன்னார் படித்தப் பள்ளி மறுநிர்மானம் மற்றும் புதிய கலையரங்கம், பல்கலைக் கழகத்தில் ஆய்விருக்கை, நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ள அன்னாரின் அனைத்து நூல்களும் குறைந்த விலையில் மறுபதிப்பு, கப்பல் கட்டுமானத்துறையில் பங்காற்றிவரும் சிறந்த தமிழருக்கு அன்னாரின் பெயரிலான ரொக்கப் பரிசுடன் கூடிய விருது, அன்னாரின் மறைந்த நாள் தியாகத்திருநாளாக அறிவிப்பு உள்ளிட்ட முத்தான அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாகச் செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள்.

…………

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9